செ.வெ.எண் : 626 நாள் : 04.8.2008

# பத்திரிக்கை செய்தி

புதிய குடும்ப அட்டைகள் பெறுதல் ,மாற்றங்கள் செய்தல் மற்றும் பொது விநியோக திட்டத்தில் காணப்படும் குறைபாடுகள் குறித்து தமிழகம் முழுவதும் வட்டங்கள் தோறும் மக்கள் குறைதீர் கூட்டம் நடத்தப்படும் என அரசு அறிவித்துள்ளது. அதன்படி உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறையின் , சென்னை 14 மண்டல பகுதி மக்களின் குறைகளை கேட்டு தீர்வு காணும் பொருட்டு இணைப்பில் கண்ட இடங்களில் 09.08.2008 அன்று காலை 10.00 மணிக்கு மக்கள் குறைதீர் கூட்டம் நடத்தப்பட உள்ளது. இதில் பொது விநியோக திட்டத்தைச் செயல் படுத்தும் உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை , கூட்டுறவு துறை மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தைச் சார்ந்த அலுவலர்கள் கலந்து கொள்ளவிருக்கின்றனர். அப்பகுதியை சுற்றி வாழும் பொது மக்கள் புதிய குடும்ப அட்டைகள் வழங்குதல் மற்றும் பொது விநியோக திட்ட கடைகளின் செயல்பாடுகள் குறித்தும் பொது விநியோக பொருட்கள் கிடைப்பது குறித்தும் தங்களுக்கு குறைகள் ஏதேனும் இருப்பின் அவற்றை இக்கூட்டத்தில் கலந்து கொண்டு தெரிவிக்கலாம். குறை தீர் கூட்டத்தில் தெரிவிக்கப்படும் குறைகளை விரைந்து தீர்வு செய்ய உரிய நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படும். சென்னையில் உள்ள 14 மண்டல பகுதி வாழ் பொது மக்கள் இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஆணையாளருக்காக

4.8.2008

1/2

இணைப்பு - 1

| வ.எண் | அலுவலகம் | கூட்டம் நடக்கவிருக்கும் இடம் |
|---|---|---|
| 1 | சிதம்பரனார் | சமூக நலக் கூடம்<br>44, செயின்ட் சேவியர் தெரு, ஏழுகிணறு, சென்னை - 1 |
| 2 | இராயபுரம் | புனித ஆன்ஸ் நர்சரி & பிரைமரி பள்ளி<br>64,65,66 மேற்கு மாதா கோவில் தெரு,<br>இராயபுரம், சென்னை - 13 |
| 3 | பெரம்பூர் | குரு சந்திரா மாளிகை,<br>573, மேற்கு நிழற்சாலை, மகாகவி பாரதி நகர்,<br>சென்னை 39 ( வட்டம் 33) |
| 4 | அண்ணாநகர் | சென்னை மாநகராட்சி உயர்நிலைப்பள்ளி,<br>திப்பாகப்பா தெரு, கீழ்ப்பாக்கம்,<br>சென்னை 10 (வட்டம் 70) |
| 5 | அம்பத்தூர் | அரசினர் மேல்நிலைப்பள்ளி, அண்ணாநகர்,<br>பட்டாபிராம், சென்னை -72 |
| 6 | வில்லிவாக்கம் | சென்னை மாநகராட்சி துவக்க பள்ளி,<br>பாலவாயில் சாலை,<br>அயனாவரம், சென்னை -23 |
| 7 | திருவொற்றியூர் | கத்திவாக்கம் நடுநிலைப்பள்ளி,<br>கத்திவாக்கம், சென்னை 57 ( நகராட்சி அருகில்) |
| 8 | தி.நகர் | கோடம்பாக்கம் மாநகராட்சி மேல் நிலைப்பள்ளி,<br>கோடம்பாக்கம், சென்னை -24 |
| 9 | மயிலாப்பூர் | சமூகநலக்கூடம்,<br>29, லஸ் அவென்யூ, சிகலிகார்,<br>மயிலாப்பூர், சென்னை -4 |
| 10 | பரங்கிமலை | லட்சுமி கல்யாண மண்டபம்,<br>பால கிருஷ்ணாபுரம், ஆதம்பாக்கம்<br>சென்னை - 88 |
| 11 | தாம்பரம் | உத்தண்டி ஊராட்சி மன்றம்,<br>உத்தண்டி , சென்னை - 119 |
| 12 | சைதாப்பேட்டை | மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி<br>5, ஆஞ்சநேயர் கோவில் சாலை, மடுவன்கரை,<br>கிண்டி, சென்னை 32 |
| 13 | ஆயிரம் விளக்கு | பாலமந்திர் பெண்கள் மருத்துவமனை<br>ஜி.என்.செட்டி ரோடு, சென்னை - 17 |
| 14 | சேப்பாக்கம் | மாநகராட்சி நடுநிலைப்பள்ளி,<br>17, வல்லப அக்ரஹாரம் தெரு,<br>திருவல்லிக்கேணி, சென்னை - 5 |

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9